முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

முன்னிலை: **திருமதி K.அறிவொளி, M.A., M.L.,**

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாள் திங்கட்கிழமை

**இளவர் காப்பாளர் கோரிக்கை மனு எண்.86/2025**

*(CNR No.TNSV01003806/2025)*

(இளவர்.சாஜிதா பானு காப்பாளர் சம்பந்தப்பட்டது)

* * * *

M.K.பாரூக் . . . மனுதாரர்

/எதிர்/

F.ஆப்ரின் தஸ்லிமா . . . எதிர்மனுதாரர்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 10.03.2026-ம் தேதி என் முன்னர் இறுதிவிசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.S.கிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.AL.செந்தில்நாதன் அவர்கள் ஆஜராகியும், மனுகுறித்து ஆட்சேபணை இருந்தால் தெரிவிக்க கோரி பொது அறிவிப்பு விளம்பரம் வெளியிட்டும் வேறு எந்த ஆட்சேபணையாளரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகாத நிலையில் இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று நீதிமன்றம் வழங்கும் . . .

**உ த் த ர வு:-**

மனுதாரரை இளவர்.சாஜிதா பானு அவர்களின் மனுச் சொத்துக்களுக்கு சட்டப்படியான காப்பாளராக விளம்புகை செய்ய கோரியும், சொத்தில் இளவருக்கு

பாத்தியமான 1/3 பங்கினை இளவரின் எதிர்கால நலனிற்காக மனுதாரர் விற்பனை செய்ய அனுமதி வழங்கக் கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் மனுதாரரால் காப்பாளர் மற்றும் குழந்தைகள் சட்டம், 1890 பிரிவுகள் 7, 10, 16 மற்றும் 29-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

*i)* மனுதாரருக்கும், ரம்ஜான்பீவி என்பவருக்கும் கடந்த 12.05.2002-ம் தேதியில் திருமணம் நடைபெற்றது என்றும், மேற்படி திருமணத்தின் இல்லற வாழ்வின் பயனாக ஆப்ரின் தஸ்லிமா 05.06.2003-ம் தேதியிலும், ஆப்ரின் ஷாபீகா 08.12.2005-ம் தேதியிலும், இளவர் சாஜிதா பானு 24.07.2009-ம் தேதியிலும் பிறந்தார்கள் என்றும், மேற்படி மனுதாரரின் மனைவியும் 21.02.2012-ம் தேதியில் காலமாகிவிட்டார் என்றும் கூறப்பட்டுள்ளது.

*ii)* எதிர்மனுதாரர் ஆப்ரின் தஸ்லிமா மற்றும் ஆப்ரின் ஷாபீகா ஆகியோர்கள் தற்போது மேஜராக உள்ளார்கள் என்றும், மனுதாரர் இளவர் குழந்தைகளுக்காக கடந்த 10.07.2008-ம் தேதியில் ஆவண எண்.5096/2008 மற்றும் கடந்த 16.07.2008-ம் தேதியில் ஆவண எண்.5251/2008-ம் எண்ணாக பதிவு பெற்ற கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெற்றார் என்றும், பின்பு மனுச் சொத்துக்களை தனது குழந்தைகளுக்கு கடந்த 13.03.2012-ம் தேதியில் ஆவண எண்.2377/2012-ம் எண்ணாக பதிவு பெற்ற இனாம்செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்தார் என்றும், மனுதாரர் கிரையம் பெற்ற ஆவண எண்.5251/2008 கிரையப்பத்திரம் மற்றும் மேற்படி ஆவணத்தில் கண்ட இளவர் கார்டியன் M.K.முகம்மது கமால் இறந்துவிட்டார் என்றும், M.பஷீர் அகமது என்பவர் ஐக்கிய

அரபு நாட்டில் வேலை செய்து வருகின்றார் என்று கூறப்பட்டுள்ளது.

*iii)* மேலும் இளவர் சாஜிதா பானு அவர்களின் எதிர்கால வாழ்க்கை மற்றும் கல்வி நலன் கருதியும் மனுச் சொத்தில் மேற்படி இளவரின் 1/3 பாகத்தை மனுதாரர் விற்பனை செய்ய வேண்டி உள்ளது என்றும், மேற்படி விற்பனை செய்து வரும் தொகை இளவர்.சாஜிதா பானு அவர்களின் கல்விக்கும் எதிர்கால வாழ்விற்கு அவசியமாய் உள்ளது என்றும், மேற்படி இளவரும் தற்பொழுது ஆசாத் மெட்ரிகுலேசன் பள்ளி, காரைக்குடியில் 11-ம் வகுப்பு படித்து வருகிறார் என்றும், மனுதாரரும் தற்போது போதிய வருமானம் இல்லாமல் குழந்தைகளை பராமரிப்பதற்கு மிகுந்த சிரமப்பட்டு வருகிறார் என்றும் கூறப்பட்டுள்ளது.

*iv)* எனவே இளவர்.சாஜிதா பானு அவர்களின் மனுச் சொத்துக்களுக்கு மனுதாரரை காப்பாளராக நியமனம் செய்தும், மேற்படி சொத்துக்களை இளவர்.சாஜிதா பானு அவர்களின் நலனிற்காக விற்பனை செய்ய அனுமதி வழங்ககோரியும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் இளவர்.சாஜிதா பானுவின் இயற்கை காப்பாளர் என்பதால் இளவர்.சாஜிதா பானு அவர்களுக்கு காப்பாளர் நியமனம் கோரி பரிகாரம் ஏதும் மனுவில் மனுதாரர் கோரவில்லை.

**3)** இம்மனுவில் மனுதாரர் தரப்பில், மனுதாரர் M.K.பாரூக் ம.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.AL.செந்தில்நாதன் அவர்கள் ஆஜராகி இளவர்.சாஜிதா பானு-க்கு, மனுதாரரை சட்டப்படியான காப்பாளராக நியமனம் செய்ய எதிர்மனுதாரருக்கு யாதொரு

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.23 18:05:54 +0530

23.03.2026 முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை

ஆட்சேபனையும் இல்லை என்று 10.02.2026-ம் தேதியன்று குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**4)** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பில் மனுவை நிரூபிக்கும் வகையில், மனுதாரர் ம.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு, 15.06.2013-ம் தேதியிட்ட எதிர்மனுதாரரின் பிறப்புச் சான்றிதழ் நகல் ம.சா.ஆ.1-ஆகவும், 25.06.2013-ம் தேதியிட்ட ஆப்ரின் ஷாபிகா-வின் பிறப்புச் சான்றிதழ் நகல் ம.சா.ஆ.2-ஆகவும், 10.06.2013-ம் தேதியிட்ட இளவர்.சாஜிதா பானு-வின் பிறப்புச் சான்றிதழ் நகல் ம.சா.ஆ.3-ஆகவும், 16.07.2008-ம் தேதியிட்ட மனுச் சொத்தை மனுதாரர் கிரையம் பெற்றதற்கான கிரையப் பத்திரம் (ஆவண எண்.5251/2008) சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4-ஆகவும், 13.03.2012-ம் தேதியிட்ட மனுதாரர் மனுச் சொத்து உள்பட மற்ற சொத்தையும் தனது பிள்ளைகளுக்கு எழுதி வைத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் (ஆவண எண்.2377/2012) சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5-ஆகவும், 23.10.2025-ம் தேதியிட்ட வில்லங்கச் சான்றிதழ் இணையதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.6-ஆகவும், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.7-ஆகவும், இளவர்.சாஜிதா பானு ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.8-ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5)** மனுதாரர் தரப்பில் மனுதாரரின் மகளான இளவர்.சாஜிதா பானு ஆசாத் மெட்ரிகுலேசன் பள்ளி, காரைக்குடியில் 11-ம் வகுப்பு படித்து வருகிறார் என்றும், இளவர்.சாஜிதா பானு 24.07.2009-ம் தேதி பிறந்துள்ளார் என்றும், தற்போது மனுதாரர் கஷ்டத்தில் இருந்து வருகிறார் என்றும், மேற்படி இளவர்.சாஜிதா பானு, ஆப்ரின் தஸ்லிமா மற்றும் ஆப்ரின் ஷாபீகா ஆகியோர்களின் எதிர்கால நலனுக்காக

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.23 18:06:02 +0530

நல்ல கல்வி அளிக்க வேண்டிய நிலையில் மனுதாரர் இருந்து வருகிறார் என்றும், இளவர்.சாஜிதா பானு நலனுக்காகவும், அவருடைய எதிர்கால கல்விக்காகவும், மனுச் சொத்தை விற்க வேண்டிய சூழ்நிலை இருந்து வருகிறது என்றும், மனுதாரர் மனு சொத்தினை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தபொழுது மேற்படி சொத்து இளவருக்கும் பாத்தியப்பட்ட சொத்தாக இருப்பதால் நீதிமன்ற அனுமதி பெற்ற பிறகே விற்பனை செய்ய முடியும் என்ற விபரம் மனுதாரருக்கு தெரிய வந்தது என்றும், எனவே மேற்படி இளவர்.சாஜிதா பானுவின் மனுச் சொத்துக்களுக்கு பாதுகாவலராக மனுதாரரை நியமிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6)** இந்நிலையில் மனுதாரர் தரப்பில் இளவர்.சாஜிதா பானு-வின் எதிர்கால நலனுக்காகவும், நல்ல கல்வி அளிக்க வேண்டியும் இளவர்.சாஜிதா பானு-வின் பெயரில் உள்ள பிரிவினையில்லாத 1/3 பாகம் உள்ள இடத்தை விற்பனை செய்ய நீதிமன்றம் மூலம் அனுமதி வேண்டி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். அதனால் கடந்த 10.03.2026-ம் தேதியன்று மனுதாரர் தன்னை ம.சா.1-ஆக விசாரித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்திருப்பதோடு, மனு சங்கதிகளை நிரூபிக்கும் வகையில் தன் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களை முன்னிட்டுள்ளார். மேற்படி மனுதாரரான ம.சா.1-ஐ 10.03.2026-ம் தேதியன்று குறுக்கு விசாரணை செய்தபொழுது, அவர் தனது குறுக்கு விசாரணையில் தான் இளவர்.சாஜிதா பானு-வின் நலனுக்காக சொத்தை விற்கிறேன் என்றும், விற்பனையாகும் தொகையைக் கொண்டு இளவர் குழந்தையின் கல்வி செலவிற்காக பயன்படுத்தப்படும் என்றும் ஒப்புக்கொண்டு

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.23 18:06:10 +0530

சாட்சியமளித்துள்ளார்.

**7)** மேற்கண்ட வகையில் விவரித்தவாறு, மனுதாரர் தனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் மற்றும் ம.சா.1 சாட்சியத்தின் வாயிலாக மனு சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளும்படியாக மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டிருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3, ம.சா.ஆ.7 மற்றும் ம.சா.ஆ.8-ஐ பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கும், ரம்ஜான்பீவி என்பவருக்கும் கடந்த 12.05.2002-ம் தேதி திருமணம் நடைபெற்று அவர்களுக்கிடையே ஏற்பட்ட இல்லற வாழ்க்கையின் பயனாக 24.07.2009-ம் தேதியன்று இளவர்.சாஜிதா பானு பிறந்ததையும், இளவர்.சாஜிதா பானு-வின் தகப்பனார் மற்றும் தாயாரின் விலாசம் மற்றும் தாய் மற்றும் தந்தையின் பெயர் விபரங்கள் தெளிவாக தெரிய வருகிறது. ம.சா.ஆ.4 முதல் ம.சா.ஆ.6-ஐ பரிசீலனை செய்கையில், இளவர்.சாஜிதா பானு-ன் தகப்பனார் M.K.பாரூக் அவர்கள் கடந்த 13.03.2012-ம் தேதியில் காரைக்குடி ரி.டி, காரைக்குடி 2-ம் நிர். இணை சப்டி, காரைக்குடி வட்டம், திருவேலங்குடி-சூரக்குடி பஞ்சாயத்துக்குள்ளான, திருவேலங்குடி குரூப் கடம்பவனம் கிராமத்தில், ஸ்ரீ காமாட்சி அம்மன் நகர் மனைப்பிரிவில், சர்வே எண்.255 பார்ட்டில் 1) ஒருங்கிணைந்த வரைபடத்தின் பிளாட் எண்.*L*-24-க்கு சாக்கோட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையரின் 30.06.1997-ம் தேதிய அ3/3001/97-ம் நிர். ஆக ஒப்புதல் பெற்ற மனைப்பிரிவின் படி *L*-24-ம் நிர். மனையிடம் கிழமேல் ஜாதியடி 60, தென்வடல் ஜாதியடி 40-க்கு சதுரடி 2400-க்கு சதுரமீட்டர் 222.96 அளவுள்ள காலிமனையிடம் சகல சுவாதீனங்களும், இதற்கு எல்கை வடக்கில் *L* 23-ம் நிர்

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.03.23 18:06:20 +0530

மனையிடம், தெற்கில் $L$-25-ம் நிர் மனையிடம், கிழக்கில் தென்வடல் 25 அடி அகல ரோடு, மேற்கில் $L$-30-ம் நிர் மனையிடம் இதற்குள்ளானது. மதிப்பு ரூ.67,380/-. இளவர். சாஜிதா பானுவிற்குரிய 1/3 பங்கு மட்டும். மேற்படி சொத்தில் இளவர்.சாஜிதா பானு-க்கு பாத்தியமான பிரிவினையில்லாத 1/3 பாகம் உள்ளது என்பது தெளிவாக தெரிய வருகிறது.

**8)** எனவே, இளவர்.சாஜிதா பானு மற்றும் எதிர்மனுதாரரின் தகப்பனார் M.K.பாருக் அவர்கள் கடந்த 10.07.2008-ம் தேதியில் ஆவண எண்.5096/2008 மற்றும் கடந்த 16.07.2008-ம் தேதியில் ஆவண எண்.5251/2008-ம் எண்ணாக பதிவு பெற்ற கிரையப் பத்திரம் மூலம் மனுச் சொத்தை கிரையம் பெற்றார் என்றும், பின்பு மனுச் சொத்துக்களை தனது குழந்தைகளுக்கு கடந்த 13.03.2012-ம் தேதியில் ஆவண எண்.2377/2012-ம் எண்ணாக பதிவு பெற்ற இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்த சொத்தை தற்சமயம் இளவர்.சாஜிதா பானு-வின் எதிர்கால வாழ்வையும், கல்வி நலன் கருதியும் இளவரின் பெயரில் மனுதாரர் கார்டியன் ஸ்தானத்தில் இருந்து மனுச் சொத்தை விற்பனை செய்து அதில் வரும் தொகை இளவர் குழந்தையின் எதிர்கால நலனுக்கு தேவைப்படுகிறது என கூறியிருப்பது ஏற்புடையதாக இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரர் M.K.பாருக் மேற்படி இளவர்.சாஜிதா பானு-க்கு பாதுகாவலர் என நியமித்து, மனுவில் கண்ட சொத்தை விற்பதற்கு மனுதாரருக்கு அனுமதி வழங்குவது மனு பொருண்மைகளின் பேரிலும், நீதியின்பாலும் சரியாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.23 18:06:30 +0530

23.03.2026

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்பட்டு, இளவர்.சாஜிதா பானுவின் மனு சொத்துக்களுக்கு மனுதாரர் M.K.பாரூக் காப்பாளர் என விளம்புகை செய்தும், மனுச் சொத்துக்களில் இளவருக்குரிய பிரிவினை இல்லாத 1/3 பாகத்தை மனுதாரர், இளவர்.சாஜிதா பானு நலனிற்காக விற்பனை செய்து அதில் வரும் இளவருக்குரிய பங்கு தொகையை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இளவர் உரிய வயதை அடையும் வரை நிரந்தர வைப்பீடு செய்து அதற்கான முறையான ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்றும், மனுதாரர் மேற்படி வைப்பீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து வரும் வட்டித் தொகையை இளவரின் கல்வி மற்றும் இதர பராமரிப்புச் செலவிற்காக பயன்படுத்திக்கொள்ளவும், அதற்குண்டான கணக்கு வழக்குகளை இந்நீதிமன்றத்தில் முறையாக சமர்ப்பிக்கவும், மேலும் இம்மனுதாரர் மேற்படி இளவருக்குண்டான நிரந்தர வைப்பீடு தொகையை இந்நீதிமன்ற அனுமதியில்லாமல் திரும்பப் பெற இயலாது என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.23 18:06:39 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி:-</u>

ம.சா.1 ___ M.K.பாரூக்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 15.06.2013 | எதிர்மனுதாரரின் பிறப்புச் சான்றிதழ் நகல். |
| ம.சா.ஆ.2 | 25.06.2013 | ஆப்ரின் ஷாபிகா-வின் பிறப்புச் சான்றிதழ் நகல். |
| ம.சா.ஆ.3 | 10.06.2013 | இளவர்.சாஜிதா பானு-வின் பிறப்புச் சான்றிதழ் நகல். |
| ம.சா.ஆ.4 | 16.07.2008 | மனுச் சொத்தை மனுதாரர் கிரையம் பெற்றதற்கான கிரையப் பத்திரம் (ஆவண எண்.5251/2008) சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.5 | 13.03.2012 | மனுதாரர் மனுச் சொத்து உள்பட மற்ற சொத்தையும் தனது பிள்ளைகளுக்கு எழுதி வைத்த இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் (ஆவண எண்.2377/2012) சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.6 | 23.10.2025 | வில்லங்கச் சான்றிதழ் இணையதள பதிவிறக்க நகல். |
| ம.சா.ஆ.7 | | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல். |
| ம.சா.ஆ.8 | | இளவர்.சாஜிதா பானு ஆதார் அடையாள அட்டை நகல். |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:</u>** இல்லை.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.23 18:06:52 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
சிவகங்கை.
இளவர் காப்பாளர் கோரிக்கை
மனு எண்.86/2025
சீரான / வரைவு ___ உத்தரவு
நாள்: 23.03.2026.